සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**84 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2012 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2012

| | | |
|---|---|---|
| ශිල්ප කලා | I, II | පැය තුනයි |
| நுண்கலை | I, II | மூன்று மணித்தியாலம் |
| Arts and Crafts | I, II | *Three hours* |


## நுண்கலை I


**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. எமது தேசியப் பாரம்பரியமாகிய நாட்டார் கலை தொடக்கத்தில் கட்புலக் கலை, கேட்டற் கலை என்றவாறு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டது. பின்வரும் நாட்டார் கலைகளில் அவ்விரு பகுதிகளும் இடம்பெறும் நாட்டார் கலைத் தொகுதியைத் தெரிந்தெடுக்க.
   (1) முகமூடிக் கலை, பித்தளைக் கைத்தொழில், சேனைப் பாடல்
   (2) அரிவு வெட்டுப் பாடல், மரச் செதுக்கல், மாட்டுவண்டிப் பாடல்
   (3) கோலம் நாட்டியம், சொகரி நாடகம், கோலாட்டம்
   (4) புடைவைக் கைத்தொழில், களிமண் கலை, அரக்குக் கைத்தொழில்


2. பின்வரும் எச்சந்தர்ப்பத்திற்கு இங்கு காணப்படும் கேத்திரகணித அமைப்பு தேவைப்படும் ?
   (1) கூர்ங்கோணம் *ABC* யை 7 சம பகுதிகளாகப் பிரித்தல்
   (2) கோணம் *ABC* யினுள்ளே 7 சமாந்தரக் கோடுகளை வரைதல்
   (3) கோடு *AC* யை 7 சம பகுதிகளாகப் பிரித்தல்
   (4) கோடு *AB* யை 7 சம பகுதிகளாகப் பிரித்தல்





3.



மேற்குறித்த கேத்திரகணித அமைப்புகளில் பல்வேறு பெறுமானங்களைக் கொண்ட நான்கு வகைக் கோணங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 90° உம் அதற்குக் கூடிய பெறுமானங்களும் உள்ள கோணங்கள் இடம்பெறும் விடையைத் தெரிந்தெடுக்க.
   (1) *A, B, C* ஆகியன   (2) *B, C, D* ஆகியன   (3) *C, D, A* ஆகியன   (4) *D, A, B* ஆகியன

4. மூலைமட்டச் சோடியைப் பயன்படுத்தி வரையப்பட்ட ஒரு கோண அமைப்பு இங்கு காணப்படுகின்றது. இங்கு கோணத்தின் பெறுமானம்
   (1) 90°
   (2) 105°
   (3) 120°
   (4) 135°




5. ஒரு விளக்குக் கம்பத்தின் உருத் தோற்றம் இவ்வுருவில் காணப்படுகின்றது. மரக் கம்பத்தின் மீது ஒரு நாற்பக்க மரத் தளத்தின் ஒரு பக்கம் திறந்திருக்குமாறு விளக்குப் பெட்டி அமைக்கப்பட்டுள்ளது. பெட்டியைச் செய்வதற்குப் பயன்படுத்தப் படும் முக்கோண மரத் தகடுகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் ?
   (1) இருசமபக்க முக்கோணியாக
   (2) சமபக்க முக்கோணியாக
   (3) சமனில்பக்க முக்கோணியாக
   (4) செங்கோண முக்கோணியாக




[பக். 2 ஐப் பார்க்க

6. ஒட்டுவேலை (patchwork) முறைக்கு அலங்கரிக்கப்பட்ட தழுவணை உறை ஒன்றின் உரு இங்கு காணப்படுகின்றது. இங்கு பூக்கள் வேறொரு நிறத் துணித் துண்டிலிருந்து வெட்டப்பட்டு பூவாகக் கோக்கப்பட்டுள்ளன. அப்பூவின் இதழ்கள் எந்தக் கேத்திரகணித வடிவத்திலிருந்து வெட்டப்படுதல் வேண்டும் ?



(1) சதுரம்
(2) செவ்வகம்
(3) சாய்சதுரம்
(4) சாய்சதுரவுரு

7.



A B C D

மேற்குறித்தவாறு நிழற்றப்பட்டுள்ள வட்டத் துண்டங்கள் இடம்பெறும் வட்டங்களில் இரு ஆரைகளும் ஒரு வில்லும் இருக்குமாறு நிழற்றப்பட்டுள்ள வட்டங்களைத் தெரிந்தெடுக்க.

(1) *A, B, C* ஆகியன (2) *A, B, D* ஆகியன (3) *B, C, D* ஆகியன (4) *A, C, D* ஆகியன

8. வட்ட ஆபரணப் பாதுகாப்புப் பெட்டி ஒன்றின் உருத் தோற்றம் இங்கு காணப்படுகின்றது. இதன் உட்பகுதி அளவில் சமமான நான்கு (4) அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு அறைப் பகுதிகளும் வட்டத்தின் என்ன பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன ?



(1) கால்வட்டம்
(2) வட்டத்தின் துண்டம்
(3) ஆரைச்சிறை
(4) அரைவட்டம்


9. ஊசிமருந்து கொண்டு செல்லப்படும் சிறிய குளிர்ப் பாத்திரம் ஒன்றின் இயல்புகள் கீழே காணப்படுகின்றன.


- முகப்பு நிலைப்படம் செவ்வகமாகும்.
- மேலேயிருந்தும் கீழேயிருந்தும் பார்க்கும்போது வட்டமாகும்.
- பக்கத்திலிருந்து பார்க்கும்போது முகப்பு நிலைப்படத்திற்குச் சமம்.
- முப்பரிமாண வடிவத்தை எடுக்கின்றது.

அவ்வியல்புகளுக்கேற்பக் குளிர்ப் பெட்டியின் வடிவம் யாதாக இருத்தல் வேண்டும் ?

(1) நாற்பக்கல் (2) உருளை (3) வட்டம் (4) செவ்வகம்

10. இங்கு ஒரு தடித்த தாளிலிருந்து வெட்டப்பட்ட நாற்பக்கல் அரியப் பொருள் ஒன்றின் விருத்தி காணப்படுகின்றது. இவ்விருத்தியை ஒட்டிய பின்னர் கிடைக்கும் சரியான பொருளைத் தெரிந்தெடுக்க.





A B C D

(1) *A* (2) *B* (3) *C* (4) *D*

11. கையினால் நிறந்தீட்டும்போது பயன்படுத்தப்படும் தூரிகை எவ்வடிப்படையில் இலக்கமிடப்படும் ?

(1) பயன்படுத்தும் நார் வகையை அடிப்படையாய்க் கொண்டு
(2) பயன்படுத்தும் வடிவத்தை அடிப்படையாய்க் கொண்டு
(3) தொடர்புபடும் நார்களை அடிப்படையாய்க் கொண்டு
(4) தூரிகையினால் செய்யப்படும் தொழில்கள் ஒவ்வொன்றையும் அடிப்படையாய்க் கொண்டு

12. சாயத்தைப் பயன்படுத்தித் துணியை அலங்கரிக்கும்போது சாயமிடல், பூசுதல் என்னும் இரு முறைகளும் பயன்படுத்தப்படும். சாயமிடுவதன் கீழ்ச் செய்யப்படும் அலங்கரிப்பு முறைத் தொகுதியைத் தெரிந்தெடுக்க.

(1) சாயத்தைத் தெளித்தல், சாயமூட்டுதல், அச்சை வைத்தல்
(2) திரைச் சட்ட அச்சீடு, அச்சு அச்சீடு, உருவரைதகட்டு அச்சு
(3) நிறந்தீட்டுதல், சாயத்தைத் தெளித்தல், தகட்டு அச்சு
(4) முடித்துச் சாயமிடுதல், பற்றிக் செய்தல், நிறமூட்டுதல்

[பக். 3 ஐப் பார்க்க

13. நார்களுக்கு நிறமூட்டும்போது நார்களுக்கு உகந்த நிறப்பொருளைத் தெரிந்தெடுக்க வேண்டும். பருத்தி போன்ற செலுலோசு நார்களுக்கு நிறமூட்டும்போது உகந்த சாய இனங்களைத் தெரிந்தெடுக்க.
   (1) எளிய சாயம் (Basic Dye), வாற் சாயம் (Vat Dye), பிக்மென்ற் சாயம் (Pigment Dye)
   (2) அமிலச் சாயம் (Acid Dye), அசோயிக் சாயம் (Azoic Dye), சுந்தகச் சாயம் (Sulfur Dye)
   (3) தாக்குஞ் சாயம் (Reactive Dye), அமிலச் சாயம், எளிய சாயம்
   (4) மோடென்ற் சாயம் (Mordent Dye), குரோம் சாயம் (Chrome Dye), கலைவுச் சாயம் (Disperse Dye)

14. அச்சு அச்சீட்டு முறையினால் ஒரு தழுவணை உறையை அலங்கரிக்கும்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகள் கீழே காணப்படுகின்றன. அவற்றின் சரியான ஒழுங்குமுறை இடம்பெறும் விடையைத் தெரிந்தெடுக்க.
   A – அச்சு முகத்தில் சாயத்தைப் பூசுதல்
   B – அச்சுத் தளத்தின் மீது துணியைப் பரப்பி நன்றாகப் பொருத்துதல்
   C – சாயம் அகற்றப்பட்ட அச்சிலிருந்து கோலத்திற்கேற்ப அச்சைவைத்தல்
   D – மென்காற்றில் உலரச் செய்தல்
   (1) A, B, C, D (2) C, D, A, B (3) B, A C, D (4) A, C, D, B

15. வெப்பம் பிணைந்த தாள் (Heat'n bond paper) ஊடகத்தினால் துணியை அலங்கரிக்கும்போது நிர்மாணிப்பவருக்குக் கிடைக்கும் பிரதான அனுகூலம்
   (1) வரையும் ஆற்றல் இல்லாவிட்டாலும் அலங்கார நிர்மாணிப்புகளைச் செய்யும் ஆற்றல் கிடைத்தல்
   (2) மிகவும் விரைவாக நிர்மாணிப்பை முடிக்கும் ஆற்றல் கிடைத்தல்
   (3) உபகரணங்களையும் கருவிகளையும் பயன்படுத்தாமல் நிர்மாணிப்புகளைச் செய்யும் ஆற்றல் கிடைத்தல்
   (4) எல்லா வீட்டு அலங்காரங்களுக்கும் இந்நிர்மாணிப்பு முறையைப் பொருத்தமாக்கல்

16. துணி அலங்காரத்திற்காகச் சாயங்களைத் தயாரிக்கும்போது வேறு அச்சீட்டு முறைகளிலும் பார்க்க வித்தியாசமான வேறுபாடு திரைச் சட்ட அச்சீட்டுக்குப் பயன்படுத்தப்படும். அவ்வேறுபாடு யாது ?
   (1) சாயக் கலவைக்குக் கடும் நிறம் உள்ள சாய வகைகளை மாத்திரம் தெரிந்தெடுத்தல்
   (2) பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் துணிகளுக்குப் பொருத்தமான சாய வகைகளை மாத்திரம் தெரிந்தெடுத்தல்
   (3) தயார்செய்யப்படும் சாயக் கலவையுடன் ஒரு திண்மக் கருவியைச் சேர்த்தல்
   (4) இளம் நிறத்திலிருந்து கடும் நிறம் வரைக்கும் சாயப் பாத்திரங்களைத் தயார்செய்தல்

17. பற்றிக் நிர்மாணிப்பில் வெடிப்புக் கோலவுருக்கள் மேலதிகமாகத் தேவைப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் மெழுகுக் கலவை தயார்செய்யப்பட வேண்டியது
   (1) தேன் மெழுகினதும் நாட்டுக் குங்கிலியத்தினதும் சதவீதத்தைச் சமமாக்குவதன் மூலம்
   (2) தேன் மெழுகுச் சதவீதத்தைக் கூட்டுவதன் மூலம்
   (3) நாட்டுக் குங்கிலியத்தின் சதவீதத்தைக் கூட்டுவதன் மூலம்
   (4) பரபின் மெழுகுச் சதவீதத்தைக் கூட்டுவதன் மூலம்

18. திருமண மேடையைத் தயார்செய்வதற்கு மரத் தூள் கூழ்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றைத் தயார் செய்யும் முதல் படிமுறை
   (1) மரத் தூளை நீரில் அமிழ்த்தி ஊறவைத்துக் கரைத்துக் கொள்ளல்
   (2) மரத் தூளைச் சல்லடையினால் அரித்து நுண் பகுதியைத் தெரிந்தெடுத்தல்
   (3) மரத் தூளை அரைத்துப் பசையாகத் தயார்செய்தல்
   (4) மரத் தூளைப் பிசினுடன் நன்றாகக் கலந்து பதப்படுத்தல்

19. கலைத்துவ வீட்டு அலங்கார நிர்மாணிப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் தாழை, ஈச்சம் இலை, பனையோலை போன்ற மூலப்பொருள்களை அரிதலும் வளைத்தலும் வெட்டுதலும் எளிதாக இருக்குமாறு பதப்படுத்துவது
   (1) அச்சில் இட்டு உலர்த்துதல் மூலம் (2) ஊறவைத்து அடித்தல் மூலம்
   (3) அவித்து உலர்த்துதல் மூலம் (4) மென்காற்றில் உலர்த்துதல் மூலம்

20. சலவைக்கல் முறையைப் பயன்படுத்தி மட்பாண்டங்களை அலங்கரிக்கும்போது நீர்ப் பாத்திரத்தின் மீது சாயங்களைப் பரப்புவதன் மூலம் கோலங்கள் உருவாக்கப்படும். இங்கு பயன்படுத்தப்படும் சாய இனம்
   (1) போஸ்ரர்ச் சாயம் (2) துணி அச்சீட்டுச் சாயம்
   (3) நீர்ச் சாயம் (4) எண்ணெய்ச் சாயம்


21. இறேந்தையைப் பின்னும்போது மூலப்பொருளாக நூல் பயன்படுத்தப்படும் அதே வேளை பல்வேறு கருவிகள் அல்லது எளிய உபகரணங்கள் பயன்படுத்தப்படும். ஒரு நூல் பட்டை மாத்திரம் பயன்படுத்தி இறேந்தையைப் பின்னப் பயன்படுத்தப்படும் எளிய உபகரணக் கூட்டத்தைத் தெரிந்தெடுக்க.
   (1) தற்றின் ஊசி, கையிறேந்தை ஊசி, கடைசல் தடி (2) கம்பளி ஊசி, தற்றின் ஊசி, தெடின் ஊசி
   (3) தெடின் ஊசி, தற்றின் ஊசி, இறேந்தை ஊசி (4) கடைசல் தடி, இறேந்தை ஊசி, தெடின் ஊசி

22. துணியை உற்பத்தி செய்யும்போது பயன்படுத்தப்படும் எல்லா நெசவுக் கோலங்களும் மூன்று அடிப்படை நெசவு முறைகளுக்கேற்பப் பாகுபடுத்தப்படும். அந்நெசவு வகைக்குரிய கோலக் கூட்டத்தைத் தெரிந்தெடுக்க.
   (1) பாய் நெசவு, விலா நெசவு, சரிவுக்கோட்டு நெசவு
   (2) சாதா நெசவு, சரிவுக்கோட்டு நெசவு, சற்றின் நெசவு
   (3) சரிவுக்கோட்டு நெசவு, சாதா நெசவு, விலா நெசவு
   (4) சற்றின் நெசவு, சாதா நெசவு, விலா நெசவு

[பக். 4 ஐப் பார்க்க


23. சாதா நெசவு முறைக்கேற்ப விழுதுத் தொகுதிகளிலிருந்து நூல் இழுக்கப்படும் ஒரு பாவு, ஊடை நூலின் இரு புரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி நெசவு செய்யும்போது எழும் கோலம் யாது ?
   (1) பாய் நெசவு
   (2) ஊடை விலா நெசவு
   (3) பாவு விலா நெசவு
   (4) சரிவுக்கோட்டு நெசவு

24. இங்கு ஒரு நெசவுக் கோலத்தின் பாவு நூல் எழுதல் வரைபுப்படுத்தப் பட்டிருக்கும் விதம் காணப்படுகின்றது. இந்நெசவுக் கோலம் யாது ?



   (1) சாதா நெசவு
   (2) பாவு விலா நெசவு
   (3) ஊடை விலா நெசவு
   (4) பாய் நெசவு

25. இங்கு ஒரு சரிவுக்கோட்டு நெசவுக் கோலத்திற்கேற்ப விழுதுத் தொகுதியிலிருந்து நூல் இழுக்கப்படும் முறை காணப்படுகின்றது. இம்முறைக்கேற்ப நூலை இழுத்து நெசவு செய்யத்தக்க நெசவுக் கோலம் யாது ?




   (1) முறிந்த சரிவுக்கோட்டு நெசவு
   (2) ஒழுங்கான சரிவுக்கோட்டு நெசவு
   (3) கூர்ச் சரிவுக்கோட்டு நெசவு
   (4) அலைச் சரிவுக்கோட்டு நெசவு

26. துணியை நெசவு செய்யும்போது தேவைக்கேற்பக் கோலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. துவாயை நெசவு செய்யும்போது தேன்கூட்டு நெசவுக் கோலம், கொளுவு நெசவுக் கோலம் ஆகியன பயன்படுத்தப்படுகின்றமைக்குக் காரணம் அவை
   (1) வலிமைமிக்க, பிணைப்புக்கூடிய நெசவுக் கோலங்களாக இருக்கின்றமை.
   (2) மென்மையான ஒப்பமான மேற்பரப்பு கிடைக்கின்றமை.
   (3) நீரை உறிஞ்சும் சக்தி உயர்வாக இருக்கும் கோலங்களாக இருக்கின்றமை.
   (4) கூடுதலான காலத்திற்குப் பேணும் ஆற்றல் உள்ள கோலங்களாக இருக்கின்றமை.

27. துணி உற்பத்தியில் தார்க் குச்சில் நூலைச் சுற்றுதல் அடிப்படைப் படிமுறையாகும். நூலைச் சுற்றப் பயன்படுத்தப் படும் உபகரணத் தொகுதியைத் தெரிந்தெடுக்க.
   (1) நூல்சுற்றும் உருளை, சுற்று துடிகட்டை, குழற் படல்
   (2) நூற் கோல், நூல்சுற்றும் உருளை, பிணிச்சட்டம்
   (3) நூல்சுற்றும் உருளை, பூச் சக்கரம், குழற் படல்
   (4) பூச் சக்கரம், நூல்சுற்றும் உருளை, தார்க் குச்சு

28. கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் துணி உற்பத்திக்காகவும் பல்வேறு பொறித்தொகுதிகள் உருவாகியதன் விளைவாக வினைத்திறன் மேம்பட்டது. ஆதியில் நூலை நூற்கப் பயன்படுத்திய உபகரணம் யாது ?
   (1) தக்கிளி
   (2) பூச் சக்கரம்
   (3) சுற்று துடிகட்டை
   (4) பாவுநூற் கோல்

29. $\frac{2^S}{60}$ என்னும் மெட்ரிக் நூல் எண் உள்ள நூலின் 2 kg இல் இருக்கும் நூற்களிகளின் எண்ணிக்கை யாது ?
   (1) $60 \times 2 \times 2 = 240$
   (2) $\frac{60 \times 1}{2 \times 2} = 15$
   (3) $60 \times 2 = 120$
   (4) $\frac{60 \times 2}{2} = 60$


30. எண் குறிப்பிடப்படாத நூலின் 5 kg நிறையுள்ள ஒரு நூற் கட்டில் 100 நூற்களிகள் இருந்தன. அது ஓர் இரட்டைப் பட்டு நூலெனின், அந்நூலின் எண்
   (1) $40^S$
   (2) $80/2^S$
   (3) $40/2^S$
   (4) $80^S$


31. களிமண் நிர்மாணிப்பில் தாய்ப் பாறையில் உள்ள அலுமினியம் ஒட்சைட்டு, சிலிக்கன் ஈரொட்சைட்டு, நீர் என்னும் அடிப்படைச் சேர்வைகள் மாத்திரம் இருப்பது
   (1) துணைக் களிமண்ணில்
   (2) முதன்மைக் களிமண்ணில்
   (3) வண்டற் களிமண்ணில்
   (4) முதற் களிமண்ணில்


[பக். 5 ஐப் பார்க்க

32. களிமண் துணிக்கையின் துணிக்கைக் கனவளவு குறைந்து கூடுதல் மீது இளகுதன்மை குறைந்து கூடும். களிமண்ணின் இளகுதன்மை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த நியமத்தைப் பெறுவதற்குச் செய்ய வேண்டியது
   (1) இரும்புச் சதவீதம் குறைவாக உள்ள கயோலின் போன்ற களிமண் வகையைக் கலத்தல்
   (2) இரும்புச் சதவீதம் கூடுதலாக உள்ள பந்துக் களிமண் போன்ற களிமண் வகையைக் கலத்தல்
   (3) பந்துக் களிமண், செங் களிமண், வெள்ளைக் களிமண் போன்ற பல்வேறு நிறக் களிமண்களைக் கலத்தல்
   (4) மணல், குரோக், களிக்கல் போன்ற ஒரு கரடான பொருளைக் கலத்தல்

33. சில உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ள பின்வரும் மட்பாண்டங்களில் களிமண் தகடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ள பாண்டங்களைத் தெரிந்தெடுக்க.


A


B


C


D

   (1) A, B ஆகியன   (2) B, C ஆகியன   (3) C, D ஆகியன   (4) A, C ஆகியன

34. ஒத்த வடிவமுள்ள மட்பாண்டங்கள் பலவற்றை உற்பத்தி செய்வதற்கு அச்சுகள் பயன்படுத்தப்படுகின்றன. அச்சைத் தயாரிக்கும்போது பாண்டத்தின் வடிவம் பெறப்படுவது
   (1) தெரிந்தெடுத்த மாதிரிகளின் மூலம்
   (2) பரிசுச் சாந்தின் மூலம்
   (3) பயன்படுத்தும் பதக் களிமண்ணின் மூலம்
   (4) தேவையான பகுதிகளை வெட்டி அகற்றுவதன் மூலம்

35. அமைத்த மட்பாண்டம் ஈரத்துடன் இருக்கும்போது ஒரு கோலைக் கொண்டு மிகக் கவனமாக இடப்படும் அலங்கரிப்பு முறை
   (1) ஓங்கோப் கோலத்தை இடுதல்
   (2) சிற்பக் கோலத்தை இடுதல்
   (3) புடைச்செதுக்கக் (எம்பொஸ்) கோலத்தை இடுதல்
   (4) களிமண் சுருட் கோலத்தை இடுதல்

36. ஒரு தேசியச் சூளையின் முதல் சுடுதலை மாத்திரம் மேற்கொண்டு பயன்படுத்தப்படும் பாண்டக் கூட்டத்தைத் தெரிந்தெடுக்க.
   (1) கழுவும் வட்டகை (பேசின்), குளியல் தொட்டி, களிமண் வளையம்
   (2) பீங்கான், பீரிசுக் கோப்பை, தேப் போச்சி
   (3) பானை, சட்டி, முட்டி, கூசா
   (4) வெப்பக் காவலி, உண்டியல், பூச்சாடி

37. மட்பாண்டம் ஒன்றின் பின்வரும் இயல்புகளைப் பெறுவதற்கு ஓர் அலங்கரிப்பு முறை பயன்படுத்தப்படுகின்றது.
   ※ நீரை உறிஞ்சாமல் இருத்தல்
   ※ அமில வகைகளுடன் தாக்கம்புரியாமல் இருத்தல்
   ※ மின் ஊடுருவிச் செல்லாமல் இருத்தல்
   ※ பளபளப்பான மேற்பரப்பு இருத்தல்
   அவ்வலங்கரிப்பு முறை யாது ?
   (1) சுடுதல்   (2) மெருகிடல்
   (3) நிறந்தீட்டுதல்   (4) சலவைக்கல்லிடல்

38. நிறத் தாள்களிலிருந்து மனிதர்களினதும் விலங்குகளினதும் பல்வேறு வடிவங்களை வெட்டி, கோலங்களுக்கேற்ப மட்பாண்டங்களில் ஒட்டுவதன் மூலம் அலங்கார நிர்மாணிப்புகள் செய்யப்படுகின்றன. இவற்றிற்கு வழங்கும் பெயர்
   (1) டெகோபாஜ் நிர்மாணிப்பு   (2) கொலாஜ் நிர்மாணிப்பு
   (3) மொசெயிக் நிர்மாணிப்பு   (4) பற்றிக் நிர்மாணிப்பு

39. தோட்ட அலங்காரத்திற்காகக் கூழ் ஊடகங்களைத் தயாரிக்கும்போது பூச்சிகளிலிருந்து பாதுகாப்பதற்குச் சேர்க்கப்படுவது
   (1) ஆளிவிதை (லின்சீட்) எண்ணெய்   (2) பைண்டர் கம்
   (3) சோடியஞ் சிலிக்கேற்று   (4) துரிசு

40. தோட்டத்தின் திறந்த வெளியில் இருக்கும் ஓர் இடத்தில் வைப்பதற்கு ஓர் அலங்கார நிர்மாணிப்பைச் செய்வதற்கு மிகவும் உகந்த ஊடகம்
   (1) பதக் களிமண்   (2) மரத் தூட் கூழ்   (3) சீமெந்து   (4) தடித்த அரிமரம்

※※

The National e-learning Portal for The General Education

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

84 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2012 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2012


ශිල්ප කලා I, II
நுண்கலை I, II
Arts and Crafts I, II

## நுண்கலை II

* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1. தொழில் இல்லாத பெண்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்தில் பாரம்பரிய வீட்டுக் கைத்தொழில்களையும் அவற்றுடன் தொடர்புபட்ட புதிய நிர்மாணிப்புகளையும் பற்றிய பயிற்சிச் செயலமர்வுகளையும் கண்காட்சிகளையும் கிராமிய மட்டத்தில் நாடு எங்கணும் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் கருப்பொருள் தலைப்பு "ஊக்குவித்த பெண்களுக்கு ஓர் உதவி" என்பதாகும்.
   - (i) இந்நிகழ்ச்சித்திட்டம் உமது கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்படுமெனின், நீர் தெரிவிக்கும் **நான்கு** பாரம்பரிய வீட்டுக் கைத்தொழில்களைக் குறிப்பிடுக.
   - (ii) இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு வேறொரு கருப்பொருள் தலைப்பைத் தெரிவிக்க.
   - (iii) விருந்தினர்களை அழைக்கும் அழைப்பிதழில் இடம்பெற வேண்டிய அத்தியாவசிய அம்சங்கள் யாவை ?
   - (iv) பரிசளிப்பு விழாவிற்காகப் பிரதான கேட்போர்கூடத்தை அலங்கரிக்க வேண்டியுள்ளது. இதற்குப் பயன்படுத்தத்தக்க **நான்கு** வகைத் தேசிய தாவரங்களைக் குறிப்பிடுக.
   - (v) விருந்தினர்கள் விளக்கேற்றி வைப்பதற்காகப் பாரம்பரியத் தேங்காயெண்ணெய் விளக்கிற்குப் பதிலாக ஆறு விருந்தினர்கள் கொளுத்தத்தக்க வேறொரு தேங்காயெண்ணெய் விளக்கின் ஒரு மாதிரியுருவை முன்வைக்க.
   - (vi) விருந்தினர்களை அழைத்துக்கொண்டு செல்லும் நடனக் குழுவின் உடைகளை அலங்கரிப்பதற்கு உருவரை தகட்டு அச்சீட்டு முறைக்கு உகந்த ஒரு கோலத்தை வரைந்து அதில் வெட்டி அகற்ற வேண்டிய பகுதியை நிழற்றுக.
   - (vii) இங்கு கண்காட்சிக்கு வைப்பதற்கு முதற் சூட்டு முறைக்குச் சுடப்பட்ட மட்பாண்டங்களை அலங்கரிப்பதற்கு உகந்த **நான்கு** அலங்கரிப்பு முறைகளைக் காட்டுக.
   - (viii) கண்காட்சிக்கு வைப்பதற்குக் கேத்திரகணித வடிவங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நிலவிரிப்பு ஒன்றின் பரும்படிப் படத்தை முன்வைக்க.
   - (ix) அறிவிப்புப் பலகை மீது வைப்பதற்கு உகந்த ஒரு பூ ஒழுங்கமைப்பின் பரும்படிப் படத்தை வரைக.
   - (x) வெற்றிக் குறியீடுகளுடன் பரிசுகளாக மாணவர்களுக்குப் புத்தகங்களும் எழுதுகருவிவகையும் அடங்கிய ஒரு பை வழங்கப்படுகின்றது. அப்பையின் உருத் தோற்றம் கீழே காணப்படுகின்றது. பையின் விருத்தியை ஒரு பரும்படிப் படத்தில் காட்டுக.






2. இங்கு தடித்த தாள்களைக் கொண்டு முப்பரிமாண வடிவத்துடன் தயாரிக்கப்பட்ட விளையாட்டுப் பொம்மை ஒன்றின் உருத் தோற்றம் காணப்படுகின்றது. இது குழியை உடையது.
   - (i) பொம்மையின் உடல், தலை என்னும் பகுதிகளின் கேத்திரகணித வடிவங்களைக் குறிப்பிடுக.
   - (ii) உமக்குத் தோற்றுகின்றவாறு விருப்பமான ஓர் அளவிடையைப் பயன்படுத்தி உடற் பகுதியின் நிமிர்வரை பெரியத் தோற்றத்தை வரைக.
   - (iii) பொம்மையின் உடற் பகுதியின் விருத்தியை உருவாக்குக.

[பக். 7 ஐப் பார்க்க

3. தற்போது வயது வித்தியாசமின்றி ஆடையணிகளை அலங்கரிப்பதற்கான நாட்டம் ஏற்பட்டுள்ளது.
   (i) ஆடைகளை அலங்கரிப்பதற்குச் சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் **நான்கு** அலங்கரிப்பு முறைகளைக் குறிப்பிடுக.
   (ii) பாடசாலை வாத்தியக் குழுவிற்கு ஒரு கழுத்து மாலையை அமைப்பதற்குப் பாண் ஊடகத்தைப் பயன்படுத்தலாம். பாண் ஊடகத்தைத் தயாரிக்கத் தேவையான பொருள்களின் பட்டியலை எழுதுக.
   (iii) (அ) திரைச் சட்ட அச்சீட்டுக்கு அல்லது பட்டுச் சட்ட அச்சீட்டுக்குச் சட்டம் தயாரிக்கப்படும் விதத்தைப் பருமட்டியாக விவரிக்க.
   (ஆ) தயாரிக்கப்பட்ட திரைச் சட்டத்தைப் பயன்படுத்தி, ஓர் ஆடையை அலங்கரிக்கும் விதத்தை ஒழுங்கு முறையாகக் காட்டுக.

4. துடைதுண்டை நெசவு செய்வதற்குத் தயார்செய்யப்பட்ட ஒரு நீள நூற் பாவு இங்கு காணப்படுகின்றது.




   ※ பாவின் நீளம் 40 m ஆகும்.
   ※ பாவின் அகலம் 50 cm ஆகும்.
   ※ ஒரு பாவு cm இல் உள்ள நூல் புரிகளின் எண்ணிக்கை 16 ஆகும்.
   ※ நூல் எண் $2^{s}/_{20}$
   ※ நூலின் நிறம் – பண்படுத்தா நூல்
   (i) துடைதுண்டை நெசவு செய்வதற்கு உகந்த **இரு** நெசவு முறைகளைக் குறிப்பிடுக.
   (ii) அவ்விரு நெசவுகளிலும் மேற்பரப்பு நூல் எழும் முறையை வரைபுப்படுத்துக.
   (iii) பாவை நெசவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் நூற்களிகளின் எண்ணிக்கையைக் காண்க.

5. கைத்தறி நெசவு உற்பத்தி மனிதனின் அடிப்படைத் தேவையாகிய ஆடைகளுக்குத் தேவையான துணியை உற்பத்தி செய்வதில் பங்களிப்புச் செய்கின்றது.
   (i) துணி உற்பத்தியின் முதல் படிமுறை நூல் சுற்றலாகும். தார்க்குழலில் நூலைச் சுற்றிய பின்னர் இருக்க வேண்டிய வடிவத்தை ஒரு வரிப்படத்தில் காட்டுக.
   (ii) பாவோடும்போது பயன்படுத்தப்படும் உபகரணத் தொகுதிக்குரிய பிணிச்சட்டம், பாவுருளை என்னும் உபகரணங்களினால் செய்யப்படும் தொழில்கள் யாவை ?
   (iii) தறியின் **இரு** பகுதிகளைக் குறிப்பிட்டு, அவற்றின் வரிப்படங்களை வரைக.

6. நிலத்தில் படிவுகளாகப் படிந்திருக்கும் களிமண் தோண்டி வெளியே எடுக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, பாண்டங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றது.
   (i) களிமண் படிவுகள் இருக்கும் **நான்கு** இடங்களைக் குறிப்பிடுக.
   (ii) பாறைகள் வானிலையால் அழியும் செயன்முறைக்கு ஏதுவாக அமைந்த **நான்கு** இரசாயன, பௌதிகச் செல்வாக்குகளை எடுத்துரைக்க.
   (iii) களிமண்ணில் இருக்கும் கூறுகளுக்கும் அதன் அமைப்புக்கும் ஏற்பக் களிமண்ணைப் பாகுபடுத்தலாம். களிமண் பாகுபடுத்தப்படும் விதத்தை ஒரு வரிப்படத்தில் காட்டுக.

7. தேவையை அடிப்படையாய்க் கொண்டு மட்பாண்டங்கள் பல்வேறு விதங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
   (i) மட்பாண்ட உற்பத்தி முறைகள் **நான்கைக்** குறிப்பிடுக.
   (ii) தோல்வன்மை நிலைமையில் மட்பாண்டத்திற்குப் பிரயோகிக்கப்படும் **இரு** அலங்கரிப்பு முறைகளைக் காட்டி, அம்முறைகள் பற்றிச் சுருக்கக் குறிப்புகள் எழுதுக.
   (iii) கிராமிய மட்பாண்ட நுட்பர்கள் தினமும் கையாளும் பாண்டங்களைச் சுடப் பயன்படுத்தும் சூளையின் வரிப் படத்தை வரைந்து, அதன் பகுதிகளைப் பெயரிடுக.

※ ※ ※